
# நோயாளர்களுக்கான உரிமைகள் சுருக்கமாக

**தங்கள் உரிமைகள் எவை என்பது பற்றி நன்கு அறிந்த நோயாளிகள் தமக்கு பரிந்துரிக்கப்பட்ட சிகிச்சைகளில் தீவிரமாக பங்குபற்ற முடியும் என்பதுடன் மருத்துவர் மற்றும் தாதியருடன் நம்பிக்கையுடன் கூடிய தொடர்புகளைப் பேணிக்கொள்ளவும் முடியும்.**




தமிழ் / TAMILISCH / TAMOUL

## 1. விளக்கமான தகவலைப் பெறுவதற்கான உரிமை

உங்கள் உடல்நிலை, திட்டமிடப்பட்ட மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள், எதிர்பார்க்கப்படும் நன்மைகள் மற்றும் ஏற்படக்கூடிய சகல விதமான ஆபத்துகள், முன்கணிப்பு மற்றும் நிதி பற்றிய அம்சங்கள் தொடர்பாக தெளிவாகவும் சரியாகவும் அறிந்து கொள்வதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.

நீங்கள் ஒரு சுகாதார வசதிகள் நிலையமொன்றினுள் பிரவேசிக்கும் போது, உங்கள் உரிமைகள் மற்றும் கடமைகள் தவிரவும் நீங்கள் அங்கு தங்கியிருப்பதற்கான நிபந்தனைகள் பற்றிய தகவல்களை காகிதவடிவத்தில் அல்லத-எலெக்ட்ரானிக் வடிவத்தில் பெற்றுக் கொள்வீர்கள்.

## 2. சுதந்திரமானதும் விளங்கிக் கொண்ட பின்னரும் ஒப்புதலளித்தல்

நீங்கள் சுயமாக தீர்மானமெடுக்கக் கூடியவராக இருகையில் (நீங்கள் ஒரு சூழ்நிலையை மதிப்பீடு செய்து தர்க்கரீதியான முடிவுகளை எடுக்க முடியுமாயின்) நீங்கள் - வயது வந்தவராகவோ அல்லது சிறியவராக இருந்தாலும் கூட - உங்கள் ஒப்புதலை சுயமாக (அழுத்தம் பிரயோகிக்கப்படாது அல்லது வற்புறுத்தலின்றி) விளக்கமாக எல்லாவற்றையும் புரிந்து கொண்டு (விடயம் சம்பந்தமான முழு அறிவுடன்) சம்மதம் தெரிவித்திருந்தால் மட்டுமே சிகிச்சை மேற்கொள்ளப்படலாம்.

## 3. நோயாளர் வாழ்க்கை உயில் மற்றும் சுயமாக தீர்மானமெடுக்க முடியாது இருக்கையில் பிரதிநிதித்துவமும்

நீங்கள் எவ்வாறான மருத்துவ சிகிச்சைகளை ஒப்புக்கொள்கிறீர்கள் மற்றும் ஒப்புக்கொள்ளவில்லை என்பதைக் குறிப்பிடும் வாழ்க்கை உயிலை நீங்கள் எழுதலாம் என்பதுடன் நீங்கள் தீர்மானிக்கக்கூடிய திறனை இழந்தால் ஒரு பிரதிநிதியை நியமிக்க முடியும். உங்களால் சிகிச்சை பற்றி தீர்மானிக்கக் கூடிய நிலையில் இல்லாதிருப்பின், இந் நபர் உங்களுக்காக (அதாவது உங்கள் எதிர்பார்க்கக்கூடிய விருப்பம் மற்றும் நலன் சார்ந்து) முடிவு செய்யலாம்.

## 4. சுகாதார துறைசார் நிபுணரையும் மற்றும்/அல்லது சுகாதார வசதிகள் நிலையத்தையும் சுதந்திரமாக தெரிவு செய்தல்

நீங்கள் பார்க்க விரும்பும் சுகாதார நிபுணரை அல்லது சுகாதார நிலையத்தை சுதந்திரமாக தேர்வுசெய்யமுடியுமா என்பது,முக்கியமாக நீங்கள் தேர்ந்தெடுக்கும் சுகாதாரக் காப்பீட்டு மாதிரியில் தங்கியுள்ளது. ஒரு தனியார் மருத்துவ நிலையத்தில் அல்லது மாநிலத்திற்கு வெளியே உள்ள மருத்துவமனை ஒன்றில் மேற்கொள்ளப்படும் சிகிச்சையானது உங்கள் அடிப்படைக் காப்பீட்டினால் முழுமையாகக் பொறுப்பேற்கப்படாது விடப்படுவதற்கான வாய்ப்புள்ளது. எனவே உங்கள் அடிப்படைக் காப்பீடு மற்றும் மேலதிக காப்பீட்டின் பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நீங்கள் எப்பொழுதும் கவனமாக வாசிக்க வேண்டும்.

வெளிநோயாளராக சிகிச்சைக்கு வரும் பொழுது, உங்களால் தெரிவு செய்யப்பட்ட காப்பீட்டு மாதிரி இதனைக் கட்டுப்படுத்தாத வரை (உதாரணமாக குடும்பமருத்துவர் மாதிரி அல்லது பராமரிப்பு நெட்வேர்க்) நீங்கள் பார்க்க விரும்பும் மருத்துவ நிபுணரை தெரிவு செய்யும் சுதந்திரம் உங்களுக்கு உண்டு.

கட்டாய அடிப்படைக் காப்பீட்டின் கீழ் வரும் சேவைகளின் பட்டியல் மற்றும் தராதரம் அப்படியே மாறாதிருக்கும்.

## 5. பலவந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

உங்கள் விருப்பத்திற்கு எதிராக அல்லது உங்கள் எதிர்ப்பையும் மீறி மேற்கொள்ளப்படும் எந்தவொரு சிகிச்சையும் பலவந்தமான நடவடிக்கையாகக் கருதப்படும், அது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையாகவோ அல்லது ஒப்புதலின்றி மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையாக இருந்தாலும் சரி.

உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சைகளுக்கு நீங்கள் சுயாதீனமாக ஒப்புதலளிக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்; அதாவது, நம்பகமான தகவல்களின் அடிப்படையிலும் நன்கு மதிப்பீடு செய்த பின்னரும் மேற்கொள்ளப்பட்டதாக அது இருக்க வேண்டும். மேற்படி நடவடிக்கைகள் உங்கள் தனிப்பட்ட விழுமியங்களுடன் ஒத்திருக்க வேண்டும்.

அடிப்படையில், எந்தவொரு விதத்திலும் பலாத்காரம் பிரயோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது; இருப்பினும், மருத்துவத்துறையில் கட்டாய நடவடிக்கைகளின் பயன்பாடு சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் தவிர்க்க முடியாமல் உள்ளது (உதாரணமாக ஒரு மனோவியல் மருத்துவ மனையில்). ஆயினும் இதற்கு இறுக்கமான சட்டரீதியாக வரையறுக்கப்பட்ட அடிப்படிகள் உள்ளன.

## 6. சுகாதாரத் துறையில் தொழில்முறை இரகசியம்

நீங்கள் சம்பந்தப்பட்ட எல்லா தரவுகளும் இரகசியமாக கையாளப்பட வேண்டும் என்பதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. மருத்துவர் இரகசியம் எனப்படும் தொழில்முறை இரகசியத்தை கடைப்பிடிப்பதற்கு சுகாதாரத்துறைசார் நிபுணர்கள் கடமைப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் பணியை மேற்கொள்ளும் போது நீங்கள் பற்றி தமக்கு தெரிந்த அனைத்தையும் தங்களுக்குள்ளே வைத்திருக்க வேண்டும்.

சட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளைத் தவிர, உங்கள் அனுமதியின்றி மூன்றாம் தரப்பினருக்கு எந்த தகவலையும் வழங்கலாகாது. தொழில்முறை இரகசியம் என்பது சுகாதார துறைசார் நிபுணர்களுக்கிடையேயும் செல்லும்.

தொழில்முறை இரகசியத்தின் நோக்கம் உங்கள் பிரத்தியேக உரிமைகளைப் பாதுகாப்பதும், துறைசார் நிபுணர்களிடம் நம்பிக்கையின் அடிப்படியில் தெரிவித்த விடயங்களைப் பற்றி அவர்கள் இரகசியம் பேணிப்பாதுகாப்பதுடன் அவர்கள் தம்மைப் பாதுகாப்பதுவும் ஆகும்.



## 7. நோயாளர் கோப்பை பார்வையிடும் உரிமை

உங்கள் நோயாளர் கோப்பைப் பார்க்கவும் அதன் உள்ளடக்கங்களை உங்களுக்கு விளக்கமாகத் தெரிந்து கொள்வதற்கும் உங்களுக்கு உரிமை உள்ளது. மாநிலத்தைப் பொறுத்து, அசல் அல்லது நகலாக ஆவணங்களை உங்களிடம் கையளிக்குமாறு வேண்டிப் பெற்றுக்கொண்டு, அவற்றை நீங்கள் விரும்பும் சுகாதார நிபுணரிடம் அனுப்ப முடியும்.

## 8. eஹெல்த் (eHealth) மற்றும் இலத்திரனியல் நோயாளர் கோப்பு

இலத்திரனியல் நோயாளர் கோப்புக்கான (EPD) உரிமை உங்களுக்கு உள்ளது. இதன் மூலம் உங்கள் சுகாதார தரவுகளை நிர்வகிப்பதில் பங்கேற்கவும், உங்கள் மருத்துவத் தகவல்களை டிஜிட்டல் முறையில் அணுகவும் உங்களுக்கு இடமளிக்கின்றது.

உங்கள் சுகாதாரத்துறை வழங்குநர்களால் சேமிக்கப்பட்ட மிக முக்கியமான தரவுகளின் நகல்களை டிஜிட்டல் வடிவில் EPD சேகரிக்கிறது. இதன் மூலம் சுகாதாரத்துறை நிபுணர்களிடையே தகவல்கள் பரிமாறப்படுவதுடன் ஒன்றிணைந்து முடிவெடுப்பதனை எளிதாக்குவதே இதன் நோக்கமாகும். உங்களைப் போலவே, உங்களுக்கு சிகிச்சையளிக்கும் சுகாதாரத்துறை நிபுணர்களும் இத் தகவல்களை எந்த நேரத்திலும் பார்க்க முடியும். உங்கள் EPD பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது. இது உங்களுக்குச் சொந்தமானது என்பதுடன் அதை யார் அணுகலாம் என்பதை நீங்களே தீர்மானிக்கலாம்.

## 9. சிகிச்சையின் பொழுது ஏற்படும் தவறுகள்

உரியவாறு மருத்துவ அவதானத்துடன் கூடிய சிகிச்சையை பெற்றுக்கொள்வதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. சிகிச்சையின் பொழுது தவறுகள் ஏற்பட்டால், உங்களுக்கு சிகிச்சை அளித்த (மருத்துவ) நிபுணரிடம் விளக்கம் கோருவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்வதற்கு எதுவாக நீங்கள் எல்லா விதமான கேள்விகளையும் கேட்க முடியும். இரண்டாவது மருத்துவக் கருத்தைப் பெறவும் மேலதிக உதவிக்காக ஒரு நோயாளர் உரிமைகள் அமைப்பைத் தொடர்பு கொள்ளவும் உங்களுக்கு உரிமை உள்ளது.

மருத்துவத்துறையில் அபாயம் எதுவுமே இல்லை (பூச்சியம் ரிஸ்க்) என்று கூற முடியாது; ஒவ்வொரு மருத்துவ சிகிச்சையும் அபாயங்களைக் கொண்டுள்ளது. சிகிச்சைக்குப் பின்னர் எதாவது சிக்கல்கள் ஏற்பட்டால், அதற்கு இயல்பாகவே மருத்துவ நிபுணர் ஒரு தவறை செய்தார் என்றோ மற்றும் அவர்தான் பொறுப்பேற்க வேண்டுமென்றோ அர்த்தமில்லை.

## 10. உதவி மற்றும் ஆலோசனை பெறுவதற்கான உரிமை

நீங்கள் ஒரு சுகாதார வசதிக்கான மருத்துவ நிலையமொன்றில் தங்கியிருக்கும் காலம் முழுவதும் உதவி பெறுவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. உங்கள் உறவினர்களிடமிருந்து ஒத்தாசை மற்றும் உதவிகளைப் பெறவும், உங்களைச் சுற்றியுள்ளவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கும் நீங்கள் உரித்துடையவர். நீங்கள் ஒரு வெளிப்புற ஆதரவு நபரையும் கொண்டு வர முடியும், உதாரணமாக ஒரு நோயாளர் அமைப்பிலிருந்து. ஒரு நோயாளர் அமைப்பிலிருந்து.

நீங்கள் வீட்டிலிருந்து சிகிச்சை பெற்றால், உங்களுக்கு நெருக்கமான ஒருவர் உங்களுக்கு ஒத்தாசை மற்றும் உதவிகளை உடனிருந்து வழங்க முடியும். உங்கள் அன்றாட வழக்கத்தில் அவர் தொடர்ந்து உங்களுக்கு உதவ முடியும்.

வெளிநோயாளராக சிகிச்சைக்கு வரும் பொழுது, உங்களால் தெரிவு செய்யப்பட்ட காப்பீட்டு மாதிரி இதனைக் கட்டுப்படுத்தாத வரை (உதாரணமாக குடும்பமருத்துவர் மாதிரி அல்லது பராமரிப்பு நெட்வேர்க்) நீங்கள் பார்க்க விரும்பும் மருத்துவ நிபுணரை தெரிவு செய்யும் சுதந்திரம் உங்களுக்கு உண்டு.

கட்டாய அடிப்படைக் காப்பீட்டின் கீழ் வரும் சேவைகளின் பட்டியல் மற்றும் தராதரம் அப்படியே மாறாதிருக்கும்.

## 11. உறுப்புக்கள் மற்றும் திசுக்களை தானம் செய்தல்

உங்கள் உறுப்புகளை மாற்று அறுவைச் சிகிச்சை செய்து தானம் செய்ய விரும்புகிறீர்களா என்பதை உங்கள் வாழ்நாளில் தீர்மானிப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

ஒப்புதல் தீர்வு என்று அழைக்கப்படும் நடைமுறை குறைந்தபட்சம் 2026 ஆம் ஆண்டின் செல்லுபடியாகும், அதாவது இறந்த நபரின் உறுப்புகள் மற்றும் திசுக்கள் அவரது உறவினர்கள் சம்மதித்திருந்தால் மட்டுமே அகற்றப்படலாம். கால நீடிப்புகுட்பட்ட ஆட்சேபனை தீர்வு மாதிரி 2026 முதல் சுவிட்சர்லாந்தில் பயன்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதாவது ஒவ்வொரு நபரும் தங்கள் வாழ்நாளில் அவர்கள் தானம் செய்ய விரும்பவில்லை என்று குறிப்பிட்டிருந்தாலே தவிர அவர்கள் பொதுவாக உறுப்புகள் மற்றும் திசுக்களின் நன்கொடையாளர்களாக கருதப்படுவார்கள். எவராவது தங்கள் வாழ்நாளில் தங்கள் சொந்த விருப்பத்தை பதிவு செய்யவில்லை என்றால், இறந்தவரின் விருப்பங்களை அனுமானத்தின் அடிப்படையில் கவனத்தில் எடுத்து உறவினர்கள் இதை முடிவு செய்கின்றனர். குறிப்பிட்ட நபர் தனது விருப்பத்தை பதிவு செய்யவில்லை என்றால் அல்லது உறவினர்கள் யாரும் தொடர்பு கொள்ளக்கூடியதாக இல்லை என்றால், எந்த உறுப்புகளும் அல்லது திசுக்களும் அகற்றப்படலாகாது.

உறுப்புக்கள், திசுக்கள் மற்றும் கலங்களை தானம் செய்தல் இனாமானது; அவற்றை வியாபாரம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

## 12. வாழ்க்கையின் இறுதிக்காலப் பராமரிப்பு

நம் வாழ்வின் இறுதிக் கட்டத்தை கண்ணியமானதும் அமைதியான முறையிலும் முடிவுக்கு கொண்டு வருவதற்கான உரிமை நம் அனைவருக்கும் உண்டு. வாழ்க்கையின் கடைசி கட்டத்தில், நோயாளிகள் மருத்துவ ரீதியாக பிரயோசனமானதும் பாதிக்கப்பட்டவர்களின் விருப்புக்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப சிகிச்சைகள் மற்றும் ஆதரவைப் பெற வேண்டும். வாழ்க்கைத் தரத்தை இறுதிவரை பராமரிப்பது அல்லது மேம்படுத்துவதே அவர்களின் குறிக்கோள்.

வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் உள்ளவர்களுக்கு நோய் அறிகுறி மற்றும் வலி நிவாரணம், ஆறுதல் பராமரிப்பு மற்றும் அவர்கள் விரும்பினால், பொருத்தமான உளவியல், சமூக மற்றும் ஆன்மீக ஒத்தாசை உட்பட நோய்த்தடுப்பு சிகிச்சைகளைப் பெறுவதற்கான உரிமை உண்டு. நீங்கள் சுகாதாரத்துறை உதவி வழங்குனர்களை சந்திக்கும் போது உடனிருந்து உதவும் உரிமை உண்டு.


## 13. நோயாளியின் கடமைகள்

ஒரு நோயாளி என்ற அடிப்படியில் உங்களுக்கு உரிமைகள் உள்ளன, அதே போன்று கடமைகளும் உள்ளன: உதாரணமாக, பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சைக்கு இணங்கி நடத்தல் மற்றும் உங்களைப் பராமரித்துக் கொண்டிருக்கும் சுகாதாரத் துறைசார் நிபுணர்களுக்கு ஆரோக்கியத்துடன் தொடர்புடைய முக்கியமான விடயங்களைப் பற்றி அறிவித்தல். இந்த கடப்பாடுகளை பின்பற்றுவதன் மூலம் உங்கள் சிகிச்சையின் தராதரத்திற்கு கணிசமாக பங்காற்றுகின்றது.

தகவல் தொடர்பு, பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் நீங்கள் கரிசனையுடன் பங்கேற்பதற்கு நன்றியைத் தெரிவிப்பதுடன், சுகாதாரத்துறை மற்றும் சமூகநல துறைசார் நிபுணர்கள் உங்கள் கண்ணியம் மற்றும் விருப்புக்களுக்களை அதிஉச்சமாக பிரதிபலிக்ககூடிய சிகிச்சை ஒன்றை வழங்குகின்றனர்.

## மேலதிக தகவல்களை விரும்புகின்றீர்களா, உதவி அல்லது ஆலோசனை தேவைப்படுகின்றதா?

"நோயாளர்களுக்கான உரிமைகள் மேலோட்டமான பார்வையில" என்ற எமது விரிவான கையேட்டை கேட்டு வாங்குங்கள் அல்லது உங்கள் மாநில சுகாதாரத் துறை அலுவலகத்தை நாடுங்கள்.



**இந்த செயல்களைச் சேர்ந்து செய்த கன்ரேகன்கள் Berne, Fribourg, Genève, Jura, Neuchâtel, Tessin, Vaud மற்றும் Valais ஆகும்.**